## சிறப்பு சார்பு நீதிமன்ற, (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)
## திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்,
## MCOP.150/2021

2024–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 9–ம் நாள் செவ்வாய்க்கிழமை 09.01.2023 (.ம.சா.1) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு. M. பிரபு, இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Alexander | வயது | : |
| த.பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

<u>நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும்.</u>

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ ரசீதுகள் ம.சா.ஆ. 17 –24 வரிசை பபடி கொடுக்கவில்ல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட ரசீது செலுத்திய தொகை தள்ளுபடி தொகை எவ்வளவு என்று பிரித்து காட்டப்படவில்லை என்றால் சரி. வழக்கிற்காக மேற்படி மருத்துவ ரசீதுகள் ஜோடிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே மேற்படி ம.சா.ஆ. 17 –24 ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2021 பிப்ரவரி 9 ம் தேதி முதல் ஏப்ரல் 14 ம் தேதி வரை எனது தாயார் மருத்துவமனையில் இருந்தார். சிகிச்சை முடிந்துதான் மருத்துவமனையில் இருந்து அனுப்பட்டார் என்றால் சரியல்ல. நீண்ட நாட்களாக மருத்துவமனையில் இருந்ததலும் கொரனா காரணமாகவும் மேற் கொண்டு சிகிச்சை வீட்டிலிருந்தே எடுத்து கொள்ளலாம் என்ற மருத்துவ ஆலோசனையின பேரில் அனுப்பட்டார். டஸ்சார்ஜ் சம்மரியில் மேற்கண்ட விவரம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. ஆனால் மருத்துவர் ஆலோசனை கூறினார். ம.சா..ஆ.4 டிஸ்சாஜ் சம்மரியில் மேற்கண்டவாறு கூறப்படவில்லை என்று சொன்னால் சரி. எனக்கு 2015 ல் திருமணம் ஆனது. எனது தாயார் இறக்கும் காலத்தில் எனக்கு 2 குழந்தைகள். எனக்கு முன்பாகவே எனது சகோதரி Christia Suganthi Brizilla க்கு 2008 ல் திருமணம் ஆகி தனியாக வசித்து வந்தார் என்றால் சரி. நானும் எனது சகோதரி தனித்தனியான குடும்பம் என்றால் சரி. 2010 ல் எம்.பி.ஏ. முடித்தேன். கணினி ஆப்பரேட்டராக 2020 ல் தான் பணியில் சேர்ந்தேன். எனது சகோதரி குடும்பமும் எனது குடும்பமும் தாயாரின் வருமானத்தை நம்பி இல்லை

என்றால் சரி. எனது தகப்பனார் ஓட்டிய இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது என்றால் சரி. மேற்படி இருசக்கர வாகனத்தை சோழமண்டலம் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீட்டு செய்திருக்கிறேன் என்றால் சரி. விபத்து நடந்த தேதியில் எனது மேற்படி இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இருந்தது என்றால் சரி. எனது தாயாருக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றாலும் எனது தகப்பனரை சார்ந்துதான் வாழ்ந்து வந்தால் என்றாலும் சரியல்ல.எனது இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. தேசிய நெடுஞ்சாலையில் எனது தகப்பனார் முறையான ஓட்டுநர் உரிமம் இன்றி சாலை விதிகளை கடைபிடிக்காமல் விபத்து ஏற்படுத்தியதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. விபத்தில் ஈடுபட்ட இருசக்கர வாகனத்தின் உரிமையானர் ஆகிய என்னையும் எனது வாகனத்தை காப்பீடு செய்த காப்பீட்டு நிறுவனத்தையும் வழக்கில் தரப்பினர்களார் சேர்க்காத காரணத்தால் தேவையான நபர்களை சேர்க்காத காரணத்திற்காக வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு உரிமை இல்லாத வாகன்தை ஓட்டுநர் உரிமம் இ்ன்றி ஓட்டி வந்ததாலும் அந்த வாகனத்தில் எனது தாயார் பின்னால் அமர்ந்து வந்ததால் அவருக்கு காப்பீடு செலுத்த 2ம் எதிர்மனதாரர் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனது தாயார் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தேவையான நபர்களை சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. எனவே எவ்வகையிலும் மனுதாரர்களுக்கு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல.